பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல் சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு (போக்சோ) நீதிமன்றம், தூத்துக்குடி.

மகளிர் நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்), தூத்துக்குடி.

முன்னிலை: **திரு. M.P. முருகன், M.A.,L.L.B.,**

மகளிர் நீதிமன்ற அமர்வு நீதிபதி (மு.கூ.பொ.),

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 27 ம் நாள் திங்கள் கிழமை

**அமர்வு வழக்கு எண். 55/2023**

**(CNR. No. TNTT01-001066-2023)**

| | |
|---|---|
| புகார்தாரர் | காவல் ஆய்வாளர்,<br>செய்துங்கநல்லூர் காவல் நிலையம்,<br>குற்ற எண். 155/2022. |
| எதிரியின் பெயர் மற்றும் விலாசம் | மூக்காண்டி என்ற<br>வெங்கட சுப்பிரமணியன்,<br>வயது. 37/2022,<br>த/பெ. சுப்பையா,<br>மாதாங்கோவில் தெரு,<br>கருங்குளம். |
| காவல் நிலையம் & குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவுகள் | செய்துங்கநல்லூர் காவல் நிலையம்,<br>குற்ற எண். 155/2022.<br>இ.த.ச. பிரிவுகள். 294(பி), 427, 307, 506(பகுதி 2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களை தொல்லை செய்தல் தடுப்பு சட்டம். |

| | |
|---|---|
| மேல்விசாரணைக்கு அனுப்பப்பட்ட நீதிமன்றத்தின் பெயர் மற்றும் எண் | நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.II, ஸ்ரீவைகுண்டம்.<br>முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண். 219/2022. |
| அரசு தரப்பில் எதிரி மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் | இ.த.ச. பிரிவுகள். 294(பி), 427, 307, 506(பகுதி 2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களை தொல்லை செய்தல் தடுப்பு சட்டம். |
| எதிரி மீது இந்நீதிமன்றத்தால் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள்<br>1 வது குற்றச்சாட்டு | அருவருக்கத்தக்க வார்த்தைகளை பேசுதல்.<br>(இ.த.ச. 294(பி) பிரிவு). |
| 2 வது குற்றச்சாட்டு | கொலை செய்ய முயற்சித்தல்.<br>(இ.த.ச. 307 வது பிரிவு). |
| 3 வது குற்றச்சாட்டு | ரூ. 50/- பெறுமானம் அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமானமுள்ள சொத்திற்கு சேதத்தை ஏற்படுத்துதல்.<br>(இ.த.ச. 427 வது பிரிவு). |
| 4 வது குற்றச்சாட்டு | குற்றமுறு மிரட்டல் செய்தல்.<br>(இ.த.ச. 506(பகுதி 2) பிரிவு). |

| | |
|---|---|
| 5 வது குற்றச்சாட்டு | அருவருக்கத்தக்க வார்த்தைகளைப் பேசி பெண்ணிற்கு துன்பம் விளைவித்தல். (பிரிவு. 4 தமிழ்நாடு பெண்களை தொல்லை செய்தல் தடுப்பு சட்டம்). |
| எதிரியின் உரை | குற்றவாளி அல்ல. |
| நீதிபதியின் முடிவு | குற்றவாளி அல்ல. |
| தீர்ப்பு | முடிவாக, எதிரி இ.த.ச. 294(பி), 307, 427, 506(பகுதி 2) பிரிவுகள் மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களை தொல்லை செய்தல் தடுப்பு சட்டத்தின்படி குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியை மேற்படி பிரிவுகளின்படியான குற்றச்சாட்டுக்களிலிருந்து பிரிவு 235(1) குற்ற விசாரணை நடைமுறை சட்டத்தின்கீழ் விடுதலை செய்து தீர்ப்பு செய்யப்படுகிறது.<br>இந்நீதிமன்ற கோப்பில் உள்ள PR.No.22/2024—ல் ஆஜர் செய்யப்பட்டுள்ள சா.பொ.1 — உடைந்த குவாட்டர் மதுபாட்டில் கண்ணாடி துண்டுகள் சிறிது, சா.பொ.2 வரிசை — உடைந்த மிட்டாய் பாட்டில் கண்ணாடி துண்டுகள் சிறிது ஆகியவற்றை மேல்முறையீடு செய்யப்படின் மேல்முறையீடு |

| | |
|---|---|
| | முடிந்த பின்னர்; மேல்முறையீடு செய்யப்படவில்லை எனில் மேல்முறையீட்டு காலம் முடிந்த பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது. |
| அரசு தரப்பு வழக்கறிஞர் | திருமதி. S.R. மினிலா,<br>அரசு சிறப்பு குற்றத்துறை வழக்கறிஞர் |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு. B. விக்னேஷ் |

இவ்வழக்கு என்முன்பாக கடந்த 15.7.2026ம் தேதி இறுதிவிசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு சிறப்பு குற்றத்துறை வழக்கறிஞர் திருமதி. S.R. மினிலா அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. B. விக்னேஷ் அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பு சாட்சிகள் அளித்துள்ள வாய்மொழி சாட்சியங்கள், அரசு தரப்பு சான்றாவணங்கள் மற்றும் அரசு தரப்பு சான்றுபொருள்கள் ஆகியவற்றை சீர்தூக்கி பார்த்தும், கற்றறிந்த இருதரப்பு வழக்கறிஞர்கள் செய்து கொண்ட வாதஉரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள்வரையில் எனது பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்.....

## தீர்ப்பு

சாட்சி ஜோசப் கருங்குளம் RC கோவில் தெருவில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். எதிரி கருங்குளம் மாதாங்கோவில் தெருவில் வசித்து வருகிறார். சாட்சி ஜோசப் அவரது வீட்டருகில் தேவதாஸ் என்ற பெயரில் மளிகை கடை வைத்து தொழில் செய்து வருகிறார். எதிரி கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக சாட்சி ஜோசப் கடைக்கு வந்து கடனுக்கு பொருட்கள் கேட்டதற்கு சாட்சி ஜோசப் கடன் கொடுக்க மாட்டேன் என்று சொல்லியுள்ளார். அதிலிருந்தே எதிரி சாட்சி ஜோசப் மீது முன்விரோதத்தில் இருந்து வந்துள்ளார். இந்த நிலையில் கடந்த 26.10.2022ம் தேதி காலை 8.30 மணியளவில் சாட்சி ஜோசப் மற்றும் அவரது மனைவியான சாட்சி ஜெயா

ஆகியோர் அவர்களது கடையில் இருக்கும்போது எதிரி சாட்சி ஜோசப் கடைக்கு வந்து மீண்டும் கடனுக்கு பொருட்கள் கேட்டுள்ளார். சாட்சி ஜோசப் எதிரியிடம் பணத்தை கொடுத்து பொருளை வாங்கி விட்டு போகும்படி கூறியுள்ளார். உடனே எதிரி சாட்சி ஜோசப்பை பார்த்து "ஏலே தேவடியா மவனே நான் எவ்வளவு பெரிய ரவுடி தெரியுமால, என்னை கண்டால் ஊரே நடுங்கும், நான் கடன் கேட்டால் தரமாட்டியா" என்று அசிங்கமாக பேசி "உன்னை இங்கேயே கொல்ல போறேன்" என்று எதிரி அவரது இடுப்பில் வைத்திருந்த குவாட்டர் பாட்டிலை எடுத்து மதுவை குடித்து விட்டு பாட்டிலை தரையில் உடைத்து உடைத்த பாட்டிலை எடுத்து "இத்தோடு சாவுல" என்று சாட்சி ஜோசப்பின் கழுத்தை நோக்கி குத்த வந்துள்ளார். இதை பார்த்த சாட்சி ஜோசப்பின் மனைவியான சாட்சி ஜெயா எதிரியின் கையை தட்டி விடவும் சாட்சி ஜோசப் உயிர் தப்பித்துள்ளார். மீண்டும் எதிரி சாட்சி ஜோசப் கடையில் இருந்த மிட்டாய் தின்பண்ட பாட்டில்களை எடுத்து உடைத்து சேதப்படுத்தியுள்ளார். இதை பார்த்த சாட்சிகள் மாரியப்பன் மற்றும் அவரது மனைவியான சாட்சி பொன்முத்துசெல்வி, சாட்சி முத்துராமலிங்கம் ஆகியோர்கள் சத்தம் போடவும் அவர்களை பார்த்து எதிரி "என்னை பிடிக்க வந்தீங்கன்னா உங்களையும் கொன்று விடுவேன்" என்று மிரட்டி விட்டு சாட்சி ஜோசப்பின் மனைவியான சாட்சி ஜெயாவை பார்த்து "தேவடியா முண்ட உன் புருஷனை ஒழுங்கா இருக்க சொல்லு, இல்லைனா உங்களை குடும்பத்தோட கொலை பண்ணிடுவேன்" என்று கொலை மிரட்டல் விடுத்து மரண பயத்தை ஏற்படுத்தி சாட்சி ஜெயாவின் பெண்மைக்கு அவமானத்தையும், மனஉளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளார். எனவே எதிரி இ.த.ச. பிரிவுகள். 294(பி), 427, 307, 506(பகுதி 2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களை தொல்லை செய்தல் தடுப்பு சட்டத்தின்படி தண்டிக்கப்பட வேண்டியவர் என்று எதிரி மீது செய்துங்கநல்லூர் காவல் நிலைய ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இந்த வழக்கினை முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண். 219/2022 ஆக கோப்பிற்கு எடுத்துக் கொண்ட ஸ்ரீவைகுண்டம் நீதித்துறை நடுவர் எண்.II அவர்கள் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான பின்னர் எதிரிக்கு பிரிவு 207 குற்ற விசாரணை நடைமுறை சட்டத்தின்கீழ் வழக்கு ஆவணங்களின் நகல்களை இலவசமாக வழங்கியுள்ளார். எதிரி மீதான குற்றச்சாட்டுக்களில்

இ.த.ச. 307 வது பிரிவின்படியான குற்றச்சாட்டு அமர்வு நீதிமன்றத்தால் மட்டும் விசாரிக்கத்தக்கது என்பதால் இந்த வழக்கினை தூத்துக்குடி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு கு.வி.மு.ச. பிரிவு. 209(அ)–ன் கீழ் விசாரணைக்காக சமர்ப்பித்துள்ளார்.

3. தூத்துக்குடி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற கோப்பில் இந்த வழக்கு அமர்வு வழக்கு எண். 55/2023 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு பின்னர் வழக்குவிசாரணையின்பொருட்டு இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பின்னர் இருதரப்பும் கேட்கப்பட்டும், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், எதிரி மீது இ.த.ச. 294(பி), 307, 427, 506(பகுதி 2) பிரிவுகள் மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களை தொல்லை செய்தல் தடுப்பு சட்டத்தின்படி குற்றச்சாட்டுக்கள் வனைந்து வழக்குவிசாரணை மேற்கொள்ள முதல்தோற்ற வழக்கு இருப்பதாக இந்நீதிமன்றம் திருப்தி கொண்டு எதிரி மீது மேற்படி பிரிவுகளின்படி குற்றச்சாட்டுக்கள் வனைந்து, விளக்கிக் கூறி வினவியபோது எதிரி தன்மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்து வழக்குவிசாரணை செய்யப்பட வேண்டும் என்று பதில் அளித்துள்ளார். எனவே, இந்த வழக்கு அரசு தரப்பு சாட்சிகளை வழக்குவிசாரணை செய்வதற்காக ஒத்தி வைக்கப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் அரசு தரப்பில் சா.பொ.1 மற்றும் சா.பொ.2 வரிசை ஆகிய சான்றுபொருள்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5. <u>அரசு தரப்பு சாட்சிகள் அளித்துள்ள வாய்மொழி சாட்சியங்கள், அரசு தரப்பு சான்றாவணங்கள் மற்றும் அரசு தரப்பு சான்றுபொருள்கள் ஆகியவற்றின் வாயிலாக அரசு தரப்பில் முன்னிடப்பட்டுள்ள வழக்கு பின்வருமாறு:</u>**

- அ.சா.1 ஜோசப் கருங்குளம் RC கோவில் தெருவில் குடும்பத்துடன் வசித்து வருகிறார்.
- எதிரி கருங்குளம் மாதாங்கோவில் தெருவில் வசித்து வருகிறார்.

- அ.சா.1 ஜோசப் அவரது வீட்டருகில் தேவதாஸ் என்ற பெயரில் மளிகை கடை வைத்து தொழில் செய்து வருகிறார்.
- எதிரி கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக அ.சா.1 ஜோசப் கடைக்கு வந்து கடனுக்கு பொருட்கள் கேட்டதற்கு அ.சா.1 ஜோசப் கடன் கொடுக்க மாட்டேன் என்று சொல்லியுள்ளார். அதிலிருந்தே எதிரி அ.சா.1 ஜோசப் மீது முன்விரோதத்தில் இருந்து வந்துள்ளார்.
- இந்த நிலையில் கடந்த 26.10.2022ம் தேதி காலை 8.30 மணியளவில் அ.சா.1 ஜோசப் மற்றும் அவரது மனைவியான அ.சா.2 ஜெயா ஆகியோர் அவர்களது கடையில் இருக்கும்போது எதிரி அ.சா.1 ஜோசப் கடைக்கு வந்து மீண்டும் கடனுக்கு பொருட்கள் கேட்டுள்ளார். அ.சா.1 ஜோசப் எதிரியிடம் பணத்தை கொடுத்து பொருளை வாங்கி விட்டு போகும்படி கூறியுள்ளார். உடனே எதிரி அ.சா.1 ஜோசப்பை பார்த்து "ஏலே தேவடியா மவனே நான் எவ்வளவு பெரிய ரவுடி தெரியுமால, என்னை கண்டால் ஊரே நடுங்கும், நான் கடன் கேட்டால் தரமாட்டியா" என்று அசிங்கமாக பேசி "உன்னை இங்கேயே கொல்ல போறேன்" என்று எதிரி அவரது இடுப்பில் வைத்திருந்த குவாட்டர் பாட்டிலை எடுத்து மதுவை குடித்து விட்டு பாட்டிலை தரையில் உடைத்து உடைத்த பாட்டிலை எடுத்து "இத்தோடு சாவுல" என்று அ.சா.1 ஜோசப்பின் கழுத்தை நோக்கி குத்த வந்துள்ளார். இதை பார்த்த அ.சா.1 ஜோசப்பின் மனைவி அ.சா.2 ஜெயா எதிரியின் கையை தட்டி விடவும் அ.சா.1 ஜோசப் உயிர் தப்பித்துள்ளார். மீண்டும் எதிரி அ.சா.1 ஜோசப் கடையில் இருந்த மிட்டாய் தின்பண்ட பாட்டில்களை எடுத்து உடைத்து சேதப்படுத்தியுள்ளார். இதை பார்த்த சாட்சி மாரியப்பன் மற்றும் அவரது மனைவியான அ.சா.3 பொன்முத்துசெல்வி, அ.சா.4 முத்துராமலிங்கம் ஆகியோர்கள் சத்தம் போடவும் அவர்களை பார்த்து எதிரி "என்னை பிடிக்க வந்தீங்கன்னா உங்களையும் கொன்று விடுவேன்" என்று மிரட்டி விட்டு அ.சா.1 ஜோசப்பின் மனைவியான அ.சா.2 ஜெயாவை பார்த்து "தேவடியா முண்ட உன் புருஷனை ஒழுங்கா இருக்க சொல்லு, இல்லைனா

உங்களை குடும்பத்தோட கொலை பண்ணிடுவேன்" என்று கொலை மிரட்டல் விடுத்து மரண பயத்தை ஏற்படுத்தி அ.சா.2 ஜெயாவின் பெண்மைக்கு அவமானத்தையும், மனஉளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளார்.

- அதேதினம் – 26.10.2022ம் தேதி நண்பகல் 12.00 மணியளவில் அ.சா.1 ஜோசப் செய்துங்கநல்லூர் காவல்நிலையம் ஆஜராகி அங்கு பணியில் இருந்த அ.சா.6 திரு. ராமகிருஷ்ணன், சிறப்பு சார்பு ஆய்வாளரிடம் நடந்த சம்பவம் குறித்து புகார்மனு (அ.சா.ஆ.1) அளித்துள்ளார்.
- அதனை பெற்று அ.சா.6 திரு. ராமகிருஷ்ணன், சிறப்பு சார்பு ஆய்வாளர் புகார்மனுவின் தன்மைக்கேற்ப செய்துங்கநல்லூர் காவல்நிலைய குற்ற எண். 155/2022 ஆக இ.த.ச. பிரிவுகள். 294(பி), 427, 307, 506(பகுதி 2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களை தொல்லை செய்தல் தடுப்பு சட்டத்தின்படி முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.4) பதிவு செய்து வழக்குகோப்பை புலன்விசாரணையின்பொருட்டு அ.சா.7 திரு. பத்மநாபபிள்ளை, ஆய்வாளரின் பார்வைக்கு வைத்துள்ளார்.
- அ.சா.7 திரு. பத்மநாபபிள்ளை, ஆய்வாளர் அதேதினம் (26.10.2022) இந்த வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடத்தை பிற்பகல் 12.45 மணியளவில் அ.சா.5 கேசவன் மற்றும் சாட்சி ஜவஹர் சாதிக் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வைமகஜர் (அ.சா.ஆ.2), சம்பவ இட மாதிரிவரைபடம் (அ.சா.ஆ.5) ஆகியவற்றை தயார் செய்துள்ளார்.
- பின்னர் அதேதினம் (26.10.2022) பிற்பகல் 1.30 மணியளவில் சம்பவ இடத்திலிருந்து உடைந்த குவார்ட்டர் மதுபாட்டில் கண்ணாடி துண்டுகள் (சா.பொ.1), உடைந்த மிட்டாய் பாட்டில் கண்ணாடி துண்டுகள் (சா.பொ.2 வரிசை) ஆகியவற்றை அ.சா.5 கேசவன் மற்றும் சாட்சி ஜவஹர் சாதிக் ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சியில் (அ.சா.ஆ.3) அ.சா.7 கைப்பற்றியுள்ளார்.

- அதேதினம் (26.10.2022) அ.சா.1 ஜோசப், அ.சா.2 ஜெயா, அ.சா.3 பொன்முத்துசெல்வி, அ.சா.4 முத்துராமலிங்கம், அ.சா.5 கேசவன், அ.சா.6 திரு. ராமகிருஷ்ணன், சிறப்பு சார்பு ஆய்வாளர் மற்றும் சாட்சிகள் மாரியப்பன், ஜவஹர் சாதிக் ஆகியோர்களை விசாரித்து அவர்கள் அளித்த வாக்குமூலங்களை அ.சா.7 பதிவு செய்துள்ளார்.
- மேலும் அதேதினம் (26.10.2022) மாலை 5.30 மணிக்கு கருங்குளம் சொக்கன் சாஸ்தா கோவில் அருகே நின்று கொண்டிருந்த எதிரியை கைது செய்து நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனைக்கு பின்னர் ஸ்ரீவைகுண்டம் நீதித்துறை நடுவர் எண்.II முன்பாக வழிக்காவல் மூலம் ஆஜர் செய்து நீதிமன்ற காவலுக்கு அ.சா.7 உட்படுத்தியுள்ளார்.
- இத்துடன் தனது புலன்விசாரணையை முடித்து எதிரி இ.த.ச. பிரிவுகள். 294(பி), 427, 307, 506(பகுதி 2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களை தொல்லை செய்தல் தடுப்புச் சட்டத்தின்படி தண்டிக்கப்பட வேண்டியவர் என்று கடந்த 28.10.2022ம் தேதி அ.சா.7 இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பு சாட்சிகள் அளித்துள்ள சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு எதிராக பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து எதிரியிடம் பிரிவு. 313(1)(ஆ) குற்ற விசாரணை நடைமுறை சட்டத்தில் கண்ட பொருண்மைகளுக்கு இணங்க எடுத்துக் கூறி வினவியபோது எதிரி மேற்படி சங்கதிகளை பொய் என்று மறுத்துள்ளார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எவரேனும் உண்டா? என்று எதிரியிடம் வினவியபோது எதிரி தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இருப்பதாக தெரிவித்தார். ஆனால் எதிரி தனது தரப்பில் சாட்சிகளாக எவரையும் விசாரித்துக் கொள்ளவில்லை. இத்துடன் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. **தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை:**

எதிரி மீது இ.த.ச. 294(பி), 307, 427, 506(பகுதி 2) பிரிவுகள் மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களை தொல்லை செய்தல் தடுப்பு சட்டத்தின்படி வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பு சாட்சிகள் அளித்துள்ள வாய்மொழி சாட்சியங்கள், அரசு தரப்பு சான்றாவணங்கள் மற்றும் அரசு தரப்பு சான்று பொருள்கள்

ஆகியவற்றின் வாயிலாக அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி மெய்ப்பிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பது தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.

8. கற்றறிந்த அரசு சிறப்பு குற்றத்துறை வழக்கறிஞர் மற்றும் கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆகியோர் செய்து கொண்ட வாதஉரைகள், அரசு தரப்பு சாட்சிகள் அளித்துள்ள வாய்மொழி சாட்சியங்கள், அரசு தரப்பு சான்றாவணங்கள் மற்றும் அரசு தரப்பு சான்று பொருள்கள் ஆகியவை இந்நீதிமன்றத்தால் சீர்தூக்கி பார்க்கப்பட்டது.

9. அரசு தரப்பில் ஆஜராகியுள்ள கற்றறிந்த அரசு சிறப்பு குற்றத்துறை வழக்கறிஞர் தனது வாதுரையில் சாட்சி ஜோசப் என்பவர் கடந்த 26.10.2022ம் தேதியன்று செய்துங்கநல்லூர் காவல் நிலையத்தில் அ.சா.ஆ.1 புகார்மனுவை கொடுத்துள்ளார் என்றும், அந்த புகார்மனுவில் எதிரி அசிங்கமாக பேசி கொலை மிரட்டல் செய்தும், மதுபாட்டிலால் தாக்கியும் இருக்கும் விபரத்தை தெரிவித்து நடவடிக்கை கோரியுள்ளார் என்றும், அதனடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன்விசாரணை நடந்துள்ளது என்றும், புலன்விசாரணை முடிவில் எதிரி புகாரில் சொல்லியிருப்பதுபோல் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டிருந்த விபரம் தெரிய வந்ததால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், நீதிமன்ற சாட்சி விசாரணையில் புகார்மனுதாரர் புகாரில் உள்ள விபரங்களை உறுதி செய்யும்முகமாக எல்லா விபரங்களையும் சொல்லியுள்ளார் என்றும், புகாரையும் ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், இந்த சம்பவத்தை நேரில் கண்ணுற்ற திருமதி. ஜெயா என்பவர் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு முழு விபரங்களையும் அரசு தரப்புக்கு ஆதரவாக சொல்லியுள்ளார் என்றும், பக்கத்து வீட்டில் வசித்து வரும் அ.சா.3 தன்னுடைய சாட்சியத்தில் வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்த விபரத்தை எடுத்துரைத்துள்ளார் என்றும், இந்த மூன்று சாட்சிகளும் எதிரியுடன் சமாதானம் செய்து கொண்டு முதல்விசாரணை விபரங்களை மறைத்து உண்மைக்கு மாறாக குறுக்குவிசாரணையில் சம்பவம் நடக்காதது போல் சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், அவர்களது குறுக்குவிசாரணையை நிராகரித்து முதல்விசாரணை அடிப்படையில் அரசு தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டிருப்பதாகக் கருதி எதிரியை அனைத்து குற்றச்சாட்டுக்களின்கீழ் தண்டிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளார்.

10. எதிரி தரப்பில் ஆஜராகியுள்ள கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் புகார்மனுவை அப்படியே சாட்சியமாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்றும், புகார்மனுவை கொடுத்தவர் அந்த விபரங்களை முதல்விசாரணையிலும், குறுக்குவிசாரணையிலும் உறுதி செய்ய வேண்டியது அவசியமாகும் என்றும், அந்த வகையில் புகார்தாரர் குறுக்குவிசாரணையின்போது பிறழ்சாட்சியாக மாறியுள்ள நிலையில் புகார் உண்மையானதில்லை என்பது தெளிவாகிறது என வாதிட்டுள்ளார். மேலும் தனது வாதுரையில் வழக்கு சம்பவத்தைப் பொறுத்து விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் நடந்த சம்பவத்தை முதல்விசாரணையில் சொல்லியிருப்பதுபோல் நடக்கவில்லை என்றும், போலீசாரிடம் விசாரணைக்கு ஆஜரானபோது எழுதாத காகிதத்தில் கையொப்பம் வாங்கிக் கொண்டதாகவும், போலீசார் சொல்லிக் கொடுத்ததுபோல் சாட்சியம் அளித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர் என்றும், அந்த அடிப்படையில் பார்க்கும்போது முதல்விசாரணை விபரங்கள் உண்மையானவை இல்லை என்பதும், குறுக்குவிசாரணையில் சொல்லியுள்ள சாட்சியம் தான் உண்மையானது என்றும் வாதிட்டுள்ளார். மேலும் வழக்கு சம்பவம் உண்மை என்பதற்கு சாட்சியங்கள் இல்லை என்பதாலும், ஒரு சாட்சியின் குறுக்குவிசாரணையை தவிர்த்து விட்டு போலீசார் சொல்லிக் கொடுத்து சொல்லியிருக்கும் முதல்விசாரணையை மட்டும் சாட்சியமாக எடுத்துக் கொள்வது நீதியின் நலனுக்கு விரோதமானது என்றும் வாதிட்டுள்ளார். மேற்கண்ட காரணங்களினால் எதிரியை குற்றவாளி இல்லை என தீர்மானித்து விடுதலை செய்திட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

11. எதிரியின் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு அவசியமான சங்கதிகள் அனைத்தையும் சாட்சியங்கள் வாயிலாக எடுத்துரைத்து மெய்ப்பிக்க வேண்டியது அரசு தரப்பின் முழு கடமையாகும். அந்த வகையில் சாட்சியங்கள் அமைதிருக்கிறதா என்பதை பார்க்க வேண்டும். எதிரி தரப்பில் சுட்டிக் காட்டியிருப்பதுபோல் சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக மாறியிருப்பதால் அவர்களது முதல்விசாரணையை நிராகரிக்க வேண்டுமா என்பதையும் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். இருதரப்பிலும் வாதுரையில் தெரிவித்துள்ள சங்கதிகள் சட்டப்படியாக ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமைந்திருக்கிறதா என்பதையும், அரசு தரப்புக்கு ஆதரவான சாட்சியங்கள்

அமைந்திருக்கிறதா, அவை குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்வதற்கு போதுமானதாக இருக்கிறதா என்பதையும் பார்க்க வேண்டும்.

12. வழக்கு சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 கொடுத்துள்ள புகார்மனு அ.சா.ஆ.1 ஆகும். அவர் தன்னுடைய சாட்சியத்தில் வழக்கு சம்பவம் 26.10.2022ம் தேதி காலை 8.30 மணிக்கு நடந்ததாகவும், அவரும், அவரது மனைவியும் அவர்களது கடையில் இருக்கும்போது எதிரி கடனுக்கு பொருள்கள் கேட்டு கொடுக்கவில்லை என்பதால் கொன்று விடுவதாக மிரட்டி இடுப்பில் வைத்திருந்த மதுபாட்டிலை எடுத்து குடித்து விட்டு தரையில் உடைத்து "இத்தோடு சாவுல" என்று கழுத்தை நோக்கி குத்த வந்ததாகவும் தெரிவித்துள்ளார். இந்த வழக்கு சம்பவம் புகார்மனுதாரருக்கும், அவரது மனைவி அ.சா.2 ஜெயாவிற்கும், பக்கத்து வீட்டை சேர்ந்த அ.சா.3 பொன்முத்துசெல்வி என்பவருக்கும் நேரில் தெரியும் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

13. வழக்கு சம்பவம் மாரியப்பன் மற்றும் முத்துராமலிங்கம் ஆகியோருக்கும் நேரில் தெரியும் என புகார்மனுவில் சொல்லப்பட்டுள்ளது. எனினும் மேற்படி மாரியப்பன் வழக்கு விசாரணையின்போது சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. முத்துராமலிங்கம் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். எனவே வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்தவர்களாகவும், பாதிக்கப்பட்டவர்களாகவும் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் அளித்துள்ள சாட்சியம் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை பார்க்க வேண்டும்.

14. அ.சா.4 முத்துராமலிங்கம் நீதிமன்ற விசாரணையில் முழுவதுமாக பிறழ்சாட்சியாகி உள்ளார். அ.சா.1 மளிகை கடை வைத்திருப்பதை மட்டும் உறுதி செய்துள்ளார். எதிரியை தெரியும் என சாட்சியம் அளித்துள்ள அ.சா.4 வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார். குறுக்குவிசாரணையில் அரசு தரப்பு வழக்கு முன்வைக்கப்பட்டபோது அவற்றை தனக்கு தெரியாது என்றும், அப்படி சொன்னால் சரியல்ல என்றும் மறுத்துள்ளார். எனவே அ.சா.4ன் சாட்சியம் எந்தவிதத்திலும் அரசு தரப்புக்கு உதவியாக அமையவில்லை என்பது தெளிவாகிறது.

15. புகார்தாரர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் 16.10.2024 அன்று அளித்துள்ள முதல்விசாரணையில் புகார் விபரங்களை அப்படியே சாட்சியமாக

அளித்துள்ளார். எதிரி தன்னை அசிங்கமாக பேசியதாகவும், கடையில் இருந்த பொருள்களை சேதப்படுத்தியதாகவும், கொலை மிரட்டலில் ஈடுபட்டதாகவும் தெளிவாக தெரிவித்துள்ளார். அவரது சாட்சியத்தை உறுதி செய்யும் வகையில் அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோரும் தங்களது முதல்விசாரணையில் அரசு தரப்பு வழக்கை உறுதி செய்துள்ளனர். புகாரில் சொல்லியிருப்பதுபோல் சம்பவம் நடைபெற்றதாகவும், எதிரி குற்ற செயலில் ஈடுபட்டதாகவும் இந்த மூன்று சாட்சிகளும் முதல்விசாரணையில் தெரிவித்துள்ளனர்.

16. அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் கடந்த 28.8.2025 அன்று குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ளனர். அந்த குறுக்குவிசாரணையில் அவர்கள் முதல்விசாரணையில் தெரிவித்துள்ள சங்கதிகளுக்கு நேரெதிராகவும், முரணாகவும் மாறுபட்ட சங்கதிகளை தெரிவித்துள்ளனர். எழுதாத காகிதத்தில் போலீசார் கையொப்பம் வாங்கியதாகவும், அந்த கையொப்பம் தான் புகார்மனுவில் காணப்படுவதாகவும் அ.சா.1 தெரிவித்துள்ளார். இது புகாரின் உண்மைதன்மையை முழுமையாக பாதிக்கக் கூடிய அம்சமாகும். புகார் அ.சா.1 ஆல் தன்னிச்சையாக நடவடிக்கை கோரும் நோக்கத்துடன் கொடுக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. அந்த வகையில் புகார்மனுவும், அதனடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையும் சந்தேகத்திற்குரிய சான்றாவணங்களாகும். எனவே அவற்றை பரிசீலனையிலிருந்து நீக்கி வைப்பது மட்டுமே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

17. சம்பவ சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் தங்களது குறுக்குவிசாரணையில் போலீசார் சொல்லிக் கொடுத்ததுபோல் முதல்விசாரணையில் சாட்சியம் அளித்திருப்பதாகவும், முதல்விசாரணையில் சொன்னதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளனர். ஒருவரது சாட்சியம் என்பது முதல்விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை இரண்டும் சேர்ந்தது ஆகும். முதல்விசாரணையில் தெரிவித்துள்ள சங்கதிகளுக்கு விரோதமாக குறுக்குவிசாரணை அமையும்போது அது அந்த சாட்சியத்தின் உண்மைதன்மையை சந்தேகத்திற்குரியதாக மாற்றி விடும். இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளும் குறுக்குவிசாரணையில் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம்

அளித்துள்ளனர். இந்த சுய முரண்பாடுகள் காரணமாக அவர்களது சாட்சியத்தை நம்பிக்கையான சாட்சியமாக எடுத்துக் கொள்ள இயலாது. நீதிமன்றத்தின் நம்பிக்கையை அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் ஈர்க்கவில்லை என்பதால் அவர்களது சாட்சியம் நம்பத்தகுந்ததில்லை என்றும், அரசு தரப்புக்கு ஆதரவானது என்றும் கருத முடியாது. எனவே அவர்களது சாட்சியத்தை நிராகரிக்க வேண்டுமென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18. சம்பவத்தை பொறுத்து விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக மாறியுள்ளனர். சம்பவத்தையும், எதிரியின் குற்ற செயலையும் நிரூபிக்கும் நியாயமான சாட்சிகளாக அமையவில்லை. இந்நிலையில் இதர சாட்சிகள் புலன்விசாரணை தொடர்பான சாட்சிகள் ஆகும். சம்பவத்திற்கு சாட்சியம் இல்லாத நிலையில் புலன்விசாரணை சாட்சியத்தின் அடிப்படையில் குற்றச்சாட்டுக்களை தீர்மானிக்க இயலாது. அந்த வகையில் அரசு தரப்பு வழக்கு எந்தவிதத்திலும் நிரூபணமாகவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19. மேலே விவாதித்துள்ள வகையிலும் அரசு தரப்பு சாட்சியங்களை பரிசீலனை செய்த வகையிலும் உண்மையில் என்ன சம்பவம் நடந்துள்ளது என்பதற்கும், எதிரி அரசு தரப்பில் சொல்லப்படுவதுபோல் குற்ற செயலில் ஈடுபட்டார் என்பதற்கும் நேரடி சாட்சியமோ அல்லது சூழ்நிலை சாட்சியமோ அரசு தரப்பில் முன்னிலை செய்யப்படவில்லை. விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கை எந்தவிதத்திலும் ஆதரிக்கவில்லை. பார்வைமகஜர் சாட்சியான அ.சா.5 ம் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை. இந்நிலையில் அ.சா.6 சிறப்பு சார்பு ஆய்வாளர், அ.சா.7 புலனாய்வு அதிகாரி ஆகியோர் அளித்துள்ள சாட்சியங்களின் அடிப்படையில் வழக்கு சம்பவம் நிரூபணமானதாக கருத இயலாது. எதிரியின் குற்றச்செயல் நிரூபணமாகாத நிலையில் அ.சா.6, அ.சா.7 ஆகியோர் அளித்துள்ள சாட்சியங்கள் அரசு தரப்பிற்கு உதவியாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. குற்றச்சாட்டுக்கள் எதுவும் ஏற்கத்தகுந்த வகையில் நிரூபணமாகவில்லை எனவும், இதன்காரணமாக எதிரியை குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் எனவும் இந்த நீதிமன்றம் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

முடிவாக, எதிரி இ.த.ச. 294(பி), 307, 427, 506(பகுதி 2) பிரிவுகள் மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களை தொல்லை செய்தல் தடுப்பு சட்டத்தின்படி குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியை மேற்படி பிரிவுகளின்படியான குற்றச்சாட்டுக்களிலிருந்து பிரிவு 235(1) குற்ற விசாரணை நடைமுறை சட்டத்தின்கீழ் விடுதலை செய்து தீர்ப்பு செய்யப்படுகிறது.

இந்நீதிமன்ற கோப்பில் உள்ள PR.No. 22/2024–ல் ஆஜர் செய்யப்பட்டுள்ள சா.பொ.1 – உடைந்த குவாட்டர் மதுபாட்டில் கண்ணாடி துண்டுகள் சிறிது, சா.பொ.2 வரிசை – உடைந்த மிட்டாய் பாட்டில் கண்ணாடி துண்டுகள் சிறிது ஆகியவற்றை மேல்முறையீடு செய்யப்படின் மேல்முறையீடு முடிந்த பின்னர்; மேல்முறையீடு செய்யப்படவில்லை எனில் மேல்முறையீட்டு காலம் முடிந்த பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 27 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M P MURUGAN

Digitally signed by M P MURUGAN
Date: 2026.07.27 16:45:11 +0530

**அமர்வு நீதிபதி(மு.கூ.பொ),**
**மகளிர் நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்),**
**தூத்துக்குடி.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. ஜோசப் |
| அ.சா.2 | திருமதி. ஜெயா |
| அ.சா.3 | திருமதி. பொன்முத்துசெல்வி |
| அ.சா.4 | திரு. முத்துராமலிங்கம் |
| அ.சா.5 | திரு. கேசவன் |
| அ.சா.6 | திரு. ராமகிருஷ்ணன் சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| அ.சா.7 | திரு. பத்மநாபபிள்ளை, ஆய்வாளர் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| வரிசை எண் | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 26.10.2022 | புகார்மனு. | அசல் |
| அ.சா.ஆ.2 | 26.10.2022 | பார்வைமகஜர். | அசல் |
| அ.சா.ஆ.3 | 26.10.2022 | சா.பொ.1 – உடைந்த குவாட்டர் மதுபாட்டில் கண்ணாடி துண்டுகள் சிறிது, சா.பொ.2 வரிசை – உடைந்த மிட்டாய் பாட்டில் கண்ணாடி துண்டுகள் சிறிது ஆகியவை கைப்பற்றப்பட்டதற்குரிய அத்தாட்சி. | அசல் |
| அ.சா.ஆ.4 | 26.10.2022 | செய்துங்கநல்லூர் காவல் நிலைய குற்ற எண். 155/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கை. | அசல் |
| அ.சா.ஆ.5 | 26.10.2022 | சம்பவ இட மாதிரிவரைபடம். | அசல் |

**<u>அரசு தரப்பு சான்றுபொருள்கள்</u>:**

| | |
|---|---|
| சா.பொ.1 | உடைந்த குவாட்டர் மதுபாட்டில் கண்ணாடி துண்டுகள் சிறிது. |
| சா.பொ.2 வரிசை | உடைந்த மிட்டாய் பாட்டில் கண்ணாடி துண்டுகள் சிறிது. |

**<u>எதிரி தரப்பு சாட்சிகள்</u>** : இல்லை.

**<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்</u>** : இல்லை.

**<u>எதிரி தரப்பு சான்றுபொருள்கள்</u>** : இல்லை.

M P
MURUGAN

Digitally signed by M P MURUGAN
Date: 2026.07.27 16:45:21 +0530

**அமர்வு நீதிபதி(மு.கூ.பொ),**
**மகளிர் நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்),**
**தூத்துக்குடி.**

**JUDGMENT ANNEXURE**

**'CASE – SUMMARY'**

<table>
<tr><td>i)</td><td>The Period of remand of the accused</td><td>:</td><td colspan="2">Date of Remand : 26.10.2022<br>Date of released on bail : 3.12.2022</td></tr>
<tr><td>ii)</td><td>The date of filing of the Complaint/final report in the court</td><td>:</td><td colspan="2">Complaint date : 26.10.2022<br>Final Report Date : 28.10.2022</td></tr>
<tr><td>iii)</td><td>The date of committal of the case to the court of sessions</td><td>:</td><td colspan="2">10.1.2023</td></tr>
<tr><td>iv)</td><td>The date of questioning of the accused u/s. 228 Cr.P.C.</td><td>:</td><td colspan="2">18.9.2024</td></tr>
<tr><td rowspan="2">v)</td><td rowspan="2">Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before Superior courts, except routine petitions like petitions u/s. 317 of the Code;</td><td rowspan="2">:</td><td>(i)</td><td>The accused filed bail petition in Crl.M.P.No. 6838/2022 on the file of Principal Sessions court, Thoothukudi u/s. 439 Cr.P.C. and the said bail petition was allowed with condition on 30.11.2022 and the accused was released on bail on 3.12.2022.</td></tr>
<tr><td>(ii)</td><td>The accused was called absent on 5.9.2024 and NBW has been issued against him. On execution of NBW, the accused was produced before this court on 10.9.2024 and remanded to Judicial custody. As per the order passed in Crl.M.P.No. 6614/2024 dated: 1.10.2024, the accused released on bail on 30.10.2024.</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | | (iii) | The accused filed petition u/s. 311 Cr.P.C to recall PW.1 to PW.3 and PW.5 to PW.7 and permit him to cross examine them and the said petition was taken on file as Crl.M.P.No. 7962 of 2024 and allowed on 26.12.2024. |
| vi) | Date of examination in Chief and Cross-examination of a witness | : | | **Chief** **Cross** |
| vii) | Date of examination of the accused under Section.313 of the code. | : | 21.11.2024 | |
| viii) | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be. | : | (i) | The accused was called absent on 29.8.2023 and NBW has been issued against him. On 31.10.2023, the accused surrendered and NBW issued against him was cancelled as per the order passed in Cr.M.P.No. 6921 of 2023 dated: 31.10.2023. |
| | | | (ii) | The accused was called absent on 25.3.2024 and NBW has been issued against him. On 3.9.2024, the accused surrendered and NBW issued against him was cancelled as per the order passed in Cr.M.P.No. 6144 of 2024 dated: 3.9.2024. |

Item vi) details:

| | Chief | Cross |
|---|---|---|
| P.W.1 | 16.10.2024 | 28.8.2025 |
| P.W.2 | 16.10.2024 | 28.8.2025 |
| P.W.3 | 16.10.2024 | 28.8.2025 |
| P.W.4 | 16.10.2024 | No cross |
| P.W.5 | 16.10.2024 | 8.7.2026 |
| P.W.6 | 12.11.2024 | No cross |
| P.W.7 | 12.11.2024 | No cross |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | (iii) | The accused was called absent on 5.9.2024 and NBW has been issued against him. On execution of NBW, the accused was produced before this court on 10.9.2024 and remanded to Judicial custody. As per the order passed in Crl.M.P.No. 6614/2024 dated: 1.10.2024, the accused released on bail on 30.10.2024. |
| | | | (iv) | The accused filed petition in Crl.M.P.No. 7917 of 2024 on the file of this court to relax the condition imposed in Crl.M.P.No. 6614 of 2024 dated: 1.10.2024 and the said petition was allowed on 22.11.2024. . |
| ix) | Grant of stay by superior Courts and the results thereof. | : | Nil | |

M P MURUGAN

Digitally signed by M P MURUGAN
Date: 2026.07.27 16:45:31 +0530

**Sessions Judge(FAC),**
**Mahalir Neethimandram,**
**(Fast Track Mahila Court),**
**Thoothukudi.**

==========================

மகளிர் நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்)

தூத்துக்குடி

அமர்வு வழக்கு எண். 55/2023

நேரிய/வரைவு தீர்ப்பு

நாள். 27.7.2026

==========================